10th August 1963]

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : புதிய தொழில்கள், ரிஸ்க் அதிகமாக இருக்கும் தொழில்கள் இவைகளுக்குப் பண உதவி கொடுக்கவும், எந்தத் தொழிலுக்கு வேறு வசதி இல்லையோ, அப்படி இருக்கும் தொழிலுக்கு முதலிடம், ப்ரிபரென்ஸ், கொடுக்க வேண்டும் என்றும் பொதுவாக கார்ப்பொரேஷனுக்குச் சொல்லு கிறோம். ஹோட்டல் தொழில் அந்தவிதமான தொழில் என்று நினைக்கவில்லை.

பள்ளிகளில் அரசியல் தலைவர்களின் படங்கள்

* 90. **கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா** : கனம் நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பள்ளிக்கூடங்களில் உள்ள திராவிடக் கழக, திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களின் படங்களை அகற்றும்படி சர்க்கார் உத்திரவு பிறப்பித்துள்ளார்களா ?

(இ) அப்படியானால், அதற்கான காரணமென்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No, and

(b) Does not arise.

திரு. ஆ. கு. சுப்பையா : ஸார், அமைச்சரவர்கள் "இல்லை" என்று சொன்னார்கள். பள்ளிக்கூடங்களில் யார் யார் படங்கள் வைக்கலாம் என்று அனுமதி அளித்திருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : மகாத்மா காந்தி, ஜனாதிபதி, காலஞ்சென்ற படேல், பண்டித நேரு, இவர்களுடைய படங்களை வைக்கலாம் என்று அனுமதி இருக்கிறது. இவை ஸ்தலஸ்தாபனச் செலவில் செய்யலாம். மற்றவர்களுடைய படங்களை வைக்க, ஸ்தலஸ்தாபனம் அரசாங்கத்தின் முன் அனுமதி பெற்றுச் செய்ய வேண்டும். அதை ஸ்தலஸ்தாபனச் செலவில் செய்யக் கூடாது.

திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே, முன் அனுமதி பெற்றுத் தான் சில படங்களை வைக்கலாம் என்றார்கள். அப்படி முன் அனுமதி இல்லாமல், ஏதாவது மாட்டியிருந்தால், அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் அதை அகற்ற ஏற்பாடு செய்யப் படுமா ? நடவடிக்கை எடுக்கப்படுமா ?

MR. SPEAKER : It is a hypothetical question.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஆம், எடுத்துக் கொள்ளப் படும் ; அம்மாதிரிப் புகார் வந்திருக்கிறது. சம்மந்தப்பட்ட கலெக்டரே அதைக் கவனித்து, என்ன நிலை என்று தெரிவிக்க உத்தரவு இடப்பட்டிருக்கிறது.

திரு. வி. எஸ் எஸ். மணி : ஸார், அரசியல் தலைவர்களுடைய படங்களைப் பள்ளியில் வைப்பதற்கு, பள்ளி மாணவர்கள் விருப்பத் திற்கிணங்க, வாக்கெடுப்பு எடுத்து, பெரும்பான்மையோர் விருப் பத்திற்கிணங்க படங்களை வைக்க அரசாங்கம் ஏற்பாடு செய் வார்களா ?

[10th August 1963

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அது முறையல்ல. அவ்வாறு செய்வதாக அரசாங்கத்திற்கு உத்தேசம் இல்லை.

திரு. முனு. ஆதி: தலைவர் அவர்களே, சில ஸ்தாபனங்களில் இப்போது இருக்கிற அமைச்சர்களுடைய படங்களை வைத்திருக்கிறார்களே, அவைகளும் அகற்றப்பட்டு விடுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அதைப் பற்றி கனம் அங்கத்தினரோ அல்லது வேறு யாரோ அரசாங்கத்திற்கு புகார் செய்தால் அதைப் பற்றிக் கவனம் செலுத்தப்படும்.

திரு. இராம. அரங்கண்ணல்: தலைவர் அவர்களே, அமைச்சர் சொன்ன நேரத்தில் அரசியல் தலைவர்களுடைய படங்களைப் பற்றி மட்டும் சொன்னார்கள். திருவள்ளுவர் படத்தை எல்லாப் பள்ளிகளிலும் வைக்கவேண்டுமென்று அரசு ஆணை பிறப்பிக்குமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அதற்குத் தனிக் கேள்வி வேண்டும். இந்தக் கேள்வி அரசியல் தலைவர்கள் படங்களைப் பற்றியது. மற்ற படங்களைப் பொறுத்தவரையில் அரசாங்கத்தின் முன் அனுமதி பெறவேண்டும். அப்படி முன் அனுமதி கேட்கும் போது அது அரசாங்கத்தால் கவனிக்கப்படும். திருவள்ளுவர் அரசியல் தலைவர் அல்ல. அது வேறு விஷயம்.

திரு. கரு. சீமைச்சாமி: ஸார், பள்ளிக்கூடங்களில் காந்தி, நேரு, பட்டேல் ஆகியவர்களின் படங்களையெல்லாம் வைக்க பஞ்சாயத்து யூனியன் பணம் செலவழிக்கலாம் என்று கூறினார்கள். அதோடு நேதாஜி போஸ் அவர்களின் படத்தையும் வைக்க பஞ்சாயத்து யூனியன் பணம் செலவு செய்வதற்கு அனுமதிக்குமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அம்மாதிரி யோசனை அரசாங்கத்திற்கு வந்தால் அதை அரசாங்கம் கவனிக்கும்.

திரு. சி. பொன்னுசாமி: பிரிவினைத் தடைச் சட்டம் அமலான பிறகு பிரிவினைத் தலைவர்கள் படங்கள் இருந்தால் அவைகளை அகற்ற சர்க்காருக்கு உத்தேசம் உண்டா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: பிரிவினைத் தலைவர்கள் என்று பட்டம் சூட்டப்பட்டது ஒன்றும் இல்லை. பிரிவினையைச் சொல்லுகிறவர்கள் கூடத் தங்கள் கருத்தை மாற்றிக் கொள்ளலாம்.

திரு. டி. கார்ச்சா கவுடர்: நமது மாநிலத்தில் ஒவ்வொரு பள்ளியிலும் காந்திஜி அவர்களின் படத்தோடு கடவுள் படம் கட்டாயமாக இருக்கவேண்டும் என்று அரசாங்கம் ஒரு உத்தரவைப் போடுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கடவுள் படம் என்று ஒன்றும் இல்லை.

திரு. கோ. சி. மணி: தலைவர் அவர்களே, எந்தப் பள்ளியிலிருந்தாவது மாநில அரசாங்கத்தில் இருக்கிற யாராவது ஒரு அமைச்சர் படத்தை வைக்கவேண்டுமென்று அனுமதி கோரி சர்க்காருக்கு மனு வந்திருக்கிறதா?

10th August 1963]

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதைப் பற்றித் தனிக் கேள்வி வேண்டும்.

திரு. செ. மாதவன் : ஏற்கெனவே காங்கிரஸ் கட்சியில் இருந்த வரும், இப்போது காங்கிரஸ் கட்சிக்கு ஆதரவாக இருக்கிற பெரியார் ராமசாமி அவர்களுடைய படத்தை வைக்க இதில் இடம் ஏற்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இப்போது நான் அளித்த விடையைத் தவிர வேறு தகவல் இல்லை. அதைப் பற்றி ஏதாவது விளக்கம் வேண்டுமென்றால் கனம் அங்கத்தினர் தனியாகக் கேள்வி கேட்கலாம்.

திரு. சா. ராமசாமி : தலைவர் அவர்களே, கல்விச் சீரமைப்பு மாநாடுகளின்போது கல்வி இலாகா இயக்குனர் எந்தக் கட்சித் தலைவர் படமானாலும் வாங்கிக்கொள்கிறேன் என்று வாங்கிக் கொண்டு எல்லாக் கட்சித் தலைவர்களுடைய படங்களும் மாட்டப் பட்டிருக்கும்போது, குறிப்பிட்ட சில தலைவர்களுடைய படங்களை மட்டும் அகற்றவேண்டும் என்று அங்குள்ள பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர்களால் அறிவிக்கப்படுகிறது என்பது உண்மையா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதைப் பற்றித் தகவல் இல்லை. ஆனால் எனக்குத் தெரியும். சீரமைப்பு மாநாடுகளில் பல படங்கள் அளிக்கப்படுகின்றன. அதைப் பற்றி அரசாங்கம் கவனிக்கும்.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : பொது ஸ்தாபனங்களுக்கு இலவசமாகக் கட்டிடங்களைக் கட்டிக்கொடுக்கும்போது, கட்டிக் கொடுக்கிறவர்களுடைய படங்களை மாட்டுவதற்கு சர்க்கார் அனுமதி கொடுக்குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவ்வாறு அரசாங்க அனுமதி கோரப்படும்போது கவனித்து தகுந்த உத்திரவு போட்டுக்கொண்டு வருகிறார்கள்.

திருமதி பி. கே. ஆர். லக்ஷ்மிகாந்தம் : தலைவர் அவர்களே, நமது ராஜ்யத்தில் உள்ள எல்லாப் பள்ளிகளிலும் நமது ராஜ்ய முதலமைச்சர் படத்தை வைக்கவேண்டுமென்று அரசாங்கம் உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவ்வாறு அரசாங்கத்திற்கு உத்தேசம் இல்லை.

Panchayat Union Council Teachers

* 91 *Q.*—**Sri R. S. VEERAPPA CHETTIAR** : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Government have received representations from the teachers of Panchayat Union Councils about their hardships consequent to their frequent transfers ordered by the Management; and